★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ THONE:

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: மாசி 11உ வியாழன் (23. 2. 56) ★ ★ வெளியீடு: மாசி 12உ வெள்ளி (24—2—56) [இதழ் 215

இரயில் பிரயாணம்

புதுடில்லி, பிப். 22—

1955-ம் ஆண்டில் தினந்தோறும் சராசரியாக 36 இலட்சம் மக்கள் இரயில் பிரயாணம் செய்திருக்கின்றனர். அதாவது ஆண்டு முழுவதும், இந்திய மக்கள் தொகையில் ஒரு சதவிகிதத்தினர் தினம் இரயில் பிரயாணம் செய்திருக்கின்றனர் என்று தோராயமாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

15 ஆண்டுகளுக்கு முன்பாக 1940—41-ல் பாகிஸ்தான் பிரியாத இந்தியாவில் தினந்தோறும் 15·7 இலட்சம் மக்கள்—அதாவது 1941-ம் வருடத்திய மக்கள் தொகைக் கணக்குப்படி 0·4 சத

(4-ம் பக்கம் பார்க்க)

பிப். 24 முதல் ஒத்துழையாமை இயக்கம்

பொது வேலை நிறுத்தத்துடன் துவங்குகிறது

மேற்கு வங்க சர்வ கட்சிக் கூட்டணி முடிவு

மேலிடப் போக்கிற்குச் சவுக்கடி

கல்கத்தா, பிப். 22—

மேற்கு வங்கமும்—பீகாரும் இணைந்து விட்டன; இதுபோல வேறு மாநிலத்தவரும் இணைந்து இருமொழி மாநிலங்கள் அமைக்க வேண்டும் என்று பேசுபவர்களுக்கு மேற்கு வங்கம் நல்ல பதில் தந்து வருகிறது.

நாளைய தினம்—பிப்ரவரி 24-ந்தேதி யன்று மேற்கு வங்கம் முழுவதிலும், பீகார்—மேற்கு வங்க இணைப்பை எதிர்த்துப் பொதுவேலை நிறுத்தம் நடைபெறப் போகிறது.

அது மட்டுமா? அன்று முதல் 'மொழிவழி' மாநிலம் வேண்டும்; மேற்கு வங்கத்தைப் பீகாருடன் இணைக்காதே'—என்ற மக்களின் கோரிக்கையை சர்க்கார் ஏற்றுக் கொள்ளும் வரையில் ஒத்துழையாமை இயக்கம் நடத்தத் திட்டமிடப் பட்டிருக்கிறது.

எல்லா இடதுசாரிக் கட்சிகளும், கூட்டாக இணைந்த மேற்குவங்க மொழிவாரி மாநில அமைப்புக் குழுவினர் இந்த முடிவைத் தெரிவித்திருக்கின்றனர்.

முதன் மந்திரிகள் சிலர் கூடிக்கொண்டு ஆடும் நாடகத்திற்கு, 'மக்களின் சம்மதம் உண்டு' என்று பேசுவது வெறும் கேலிக் கூத்து என்பதை, மேற்கு வங்கத்தில் நடைபெறும் மகத்தான போராட்ட நிகழ்ச்சிகள் சொல்லுகின்றன.

மேற்கு வங்கத்தில் பிப். 24-ந் தேதி நடைபெறும் பொது வேலை நிறுத்தம், ஒத்துழையாமை இயக்கம் எல்லாம், இருமொழி மாநிலம் வேண்டுமென ஒலமிடுபவர்களின் கண்களைத் திறக்க வேண்டும்.

'மர்ம மரணம்'

கெய்ரோ, பிப். 22—

நீல நைல் மாநிலத்தில் கோஸ்டி என்ற இடத்தில் சென்ற வார இறுதியில் போலீசாருடன் கைகலந்து பலாத்காரங்கள் பல புரிந்ததாகக் கைது செய்ய பட்டிருந்த 194 பண்ணைத் தொழிலாளர்கள், இராணுவப் பாசறைகளில் இறந்துவிட்டதாகச் செய்தி தரப் பட்டுள்ளது. இம்மரணத்திற்கு காரணம் என்ன என்று தெரியவில்லையாம்!

மலாயா முதன் மந்திரியை கடத்த சதி?

சிங்கப்பூர், பிப். 22—

மலாயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரஹ்மான், மற்றும் இதர மந்திரிகள் எல்லாம் லண்டனில் சுதந்திரப் பேச்சு வார்த்தைகள் நடத்திவிட்டு சிங்கப்பூர் திரும்பியதும் அவர்களைக் கடத்திச் சென்றுவிட பெரியதொரு சதி நடைபெற்றதாகவும், அது கடைசி நேரத்தில் நிறைவேறாது போய்விட்டதாகவும் 'சிங்கப்பூர் பிரீ பிரஸ்' என்ற ஆங்கில இதழ் குறிப்பிட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

மந்திரிகளைக் கடத்தி பல மணி நேரம் காவலில் வைத்திருக்க இளைஞர்கள் திட்டமிட்டிருந்ததாகவும் கூறப்படுகிறது.

லண்டனிலிருந்து திரும்பியதும், பேச்சுவார்த்தைகள் குறித்து மக்களிடம் முதன் மந்திரி பேசுவதற்குத் தடையாகவிருந்த மலாயா சர்க்கார் அதிகாரிகளின் போக்கிற்கு எதிராகவே இந்த முயற்சி செய்யப்பட்டது என்றும் கூறப்படுகிறது.

தலைமை நிலையச் செய்தி

கள்ளக்குறிச்சி-கடலூர் சம்பவங்கள்: மேலும் விவரம்

அண்ணா அவர்கள், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுடன் 22-2-56 அன்று அண்ணாமலை நகர் தி. மு. க. மாணவர் கிளை ஆண்டு விழாவில் கலந்துகொள்வதற்காகச் சென்னையிலிருந்து புறப்பட்டுச் செல்லுகையில் மாலை 4-மணிக்கு உளுந்தூர் பேட்டையில், தோழர் சண்முகம் அவர்கள் இல்லத்தில், கள்ளக்குறிச்சி தி. மு. கழகச் செயலாளர் வகாப், நிர்வாக உறுப்பினர் துரை, தமிழரசுக் கழக மாநில செயற்குழு உறுப்பினர் கி.ஜனார்த்தனம் ஆகியோரைச் சந்தித்தார். 20-2-56 அன்று நடைபெற்ற அர்த்தாலின்போது நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தின் விவரத்தையும், குண்டடிபட்டு மருத்துவ விடுதியில் சிகிச்சை பெற்றுவரும் தோழர்களின்நிலையையும் அவர்கள் விளக்கினர்.

அர்த்தாலின்போது கைது செய்யப்பட்ட 22 தோழர்கள் மீது 147—332, 151 இந்தியன் பினல்கோடு சட்டம், கிரிமினல் சட்டம் 7-வது பிரிவுப்படியும் குற்றம் சாட்டப்பட்டிருப்பதாகவும் வழக்கறிஞர் தெரிவித்தார். கைது செய்யப்பட்டுள்ள 22 தோழர்களும் தி.மு. கழகம், தமிழரசுக் கழகம் ஆகியவைகளைச் சார்ந்தவர்களாகும்.

இந்த 22 பேரையும் ஜாமீனில் வெளிவர ஆவன செய்யப் பட்டிருப்பதாகக் கழகத் தோழர்கள் தெரிவித்தனர்.

22-2-56 காலை 11-மணிக்கு டெப்டி கலெக்டர் திரு. அய்யாவு நாடார் அவர்கள் விசாரணை தொடங்கியதாகவும், போலீஸ் அதிகாரிகளும், பொது மக்கள் ஏறத்தாழ நூறு பேர் சாட்சியமளித்திருக்கின்றனர் என்றும் தெரியவந்தது.

அண்ணா அவர்கள், அனைவரையும் அமைதியாய் இருக்குமாறு கேட்டுக்கொண்டு, வழக்கு நடைபெறுமாக வேண்டிய நிர்ப்பந்தத்தை அரசியலார் உண்டாக்கினால் அதற்கு ஆவன செய்யலாம் என்றும் தெரிவித்ததோடு, சிறையிலுள்ள தோழர்களுக்கும் ஆறுதல் கூறுமாறு கேட்டுக் கொண்டு துணைப் பொதுச் செயலாளருடன் அண்ணாமலை நகருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

★

அண்ணாமலை நகர் கூட்டத்தை முடித்துக்கொண்டு, அண்ணா அவர்கள் துணைப் பொதுச் செயலாளருடன் கடலூர் செல்லுவதென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது; ஆனால், அன்று மதியம் 2-மணிக்கே ஜாமீனில் விடுதலையான தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. அவர்கள் உடனே புறப்பட்டு இரவு 7-30 மணிக்கு அண்ணாமலை நகர் வந்து சேர்ந்தார்; கூட்டம் முடிந்த பிறகு, அர்த்தாலன்று கடலூரில் நடைபெற்ற சம்பவங்களை விவரித்துக் கூறினார்.

அர்த்தாலன்று தி. மு. கழகம், கம்யூனிஸ்டு, தமிழரசு கழகம், சோஷலிஸ்டு ஆகிய கட்சிகளைச் சார்ந்த 122 பேர் கைது செய்யப்பட்டனர்; அவர்களில் தோழர் ஏ. கோவிந்தசாமி எம். எல். ஏ. உள்ளிட்ட அறுவர் மீது மட்டும் குற்றம் சாட்டி, மற்றவர்களை அடுத்த நாள் விடுதலை செய்யப்பட்டிருக்கிறது.

தோழர் ஏ. கோவிந்தசாமி உள்ளிட்ட அறுவர்மீதும் இந்தியன் பினல் கோடு 395-வது பிரிவுப்படி குற்றம் சாட்டப்பட்டிருக்கிறது. மார்ச்சு 3-ந் தேதியன்று வழக்கு விசாரிக்கப்படுமென்று தெரிகிறது.

இங்கும், வழக்கு நடந்த வேண்டிய அவசியத்தை அரசியலார் உண்டாக்குவார்களானால் அதற்கேற்ப ஆவன செய்யலாமென்று அண்ணா அவர்கள் தெரிவித்ததோடு, கடலூரிலிருந்து வந்திருந்த கழகச் செயலாளர், மற்ற தோழர்கள் அனைவரையும் அமைதியாக இருக்குமாறும், மேற்கொண்டு கழகப் பணியினைக் கவனிக்குமாறும் கேட்டுக் கொண்டு துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களுடன் சென்னைக்குப் புறப்பட்டார்.

★

தம்மம்பட்டி (ஆத்தூர்)யில் நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தைப் பற்றியும், கள்ளக்குறிச்சியின் சம்பவங்களின் மேலும் விவரம் அறிந்து வரவும் தலைமை நிலைய சார்பில் தோழர் கே. ஏ. மதியழகன் அனுப்பப்பட்டிருக்கிறார். அவரது அறிக்கை நாளை வெளிவரும்.

அகாலியரை ஏமாற்ற சதி

'மகா பஞ்சாப்' ஏற்பாடாம்

புது டில்லி, பிப். 22—

'மும்மொழி கொண்ட மகா பஞ்சாப்' ஏற்படுத்தலாமென்று அகாலித் தூதுக் குழுவினருக்கு இந்திய சர்க்கார் ஆலோசனை கூறியுள்ளதாகத் தெரிகிறது.

பஞ்சாபி, இந்தி, பஹாரி மொழி மாநிலங்களுக்கு 'மண்டல சபை'கள் ஏற்படுத்தலாமென்று இத்திட்டம் கூறுவதாகத் தெரிகிறது.

சட்ட பூர்வமான அதிகார மில்லாத வெறும் ஆலோசனை கூறும் மண்டலசபை யோசனை அகாலிகளுக்குத் திருப்தியளிக்கவில்லையாம்!

சமீப மாதங்களாக ஏற்பட்டுள்ள விலைவாசி உயர்வு தற்காலிகமானதென்றும், அந்த விலை உயர்வு வெகு காலம் நீடிக்காதென்றும் மாநிலங்கள் சபையில், கேள்வி நேரத்தில் துணை நிதியமைச்சர் பகத்சிங் கூறினார்.

நேபாளக் கோயில்கள்

புதுப்பிக்க இத்தாலி நிபுணர்

புது டில்லி, பிப். 22—

2,500-வது புத்தர் பிறந்த நாளை முன்னிட்டு நேபாளத்திலுள்ள கோயில்கள், ஓய்வு விடுதிகள் முதலியவற்றைப் புதுப்பிக்கவும், புத்தம் புது தோட்டங்கள் அமைக்கவும் கீழ்த்திசை இயல் நிபுணர் பேராசிரியர் டூஸ்ஸி (இத்தாலியர்) என்பவரை நேபாள அரசியலார் அழைத்துள்ளார்கள்.

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மேலும் எழுதுமுன் கவனிக்க இதைச் சமர்ப்பிக்கிறோம்

'பிப்ரவரி 20 படிப்பினை' என்று ஆராய்ச்சி நடத்துகிறது 'விடுதலை'. தொடருமாம்! எனவே, மேலும் எழுதுமுன், இதைக் கவனத்தில் கொள்வது நல்லது என்று சமர்ப்பிக்கிறோம்; ஏனெனில், முதலிலேயே தவறு செய்யாமலிருப்பது நல்லதல்லவா?

"இந்த செயற் குழுவில், மேற்படி தினசரியான திரு. ஆதித்தன் அவர்களும் ஒருவர் என்பதை வாசகர்கள் மறந்துவிடக்கூடாது," என்று 'விடுதலை' கூறுகிறது.

வாசகர்களுக்கு, விஷய தானம் அளிப்போருக்கு நாம் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்வது என்னவென்றால், ஆதித்தன் இந்தச் செயற் குழுவில் உறுப்பினர் அல்ல; ஆலோசனைக் கூட்டத்திற்கு வந்தார்; ஆனால் செயற் குழுவில் இல்லை.

எனவே, அடுத்த கட்டுரையில், 'சுருதி' இப்படி மாறினால் சங்கீதம் இனிக்கும் என்று கருதுகிறோம்; எப்படி என்றால், 'ஆதித்தன்கூட இதை மதிக்கவில்லை—சேரவில்லை; அப்படிப்பட்ட அல்பமான கிளர்ச்சி இது,' என்று மாற்றிக்கொள்ளலாம்.

தொடரட்டும்! தொடரட்டும்! இருபது நாள் வேலைத் தொல்லைக்குப் பிறகு எங்களுக்கும் வேடிக்கையும், பொழுதுபோக்கும் வேண்டாமா? தருக! மகிழ்கிறோம்!

—தடியடிபட்டோர்.

நம் நாடு

தி.மு.க.தின இதழ் ஆசிரியர் இரா.நெடுஞ்செழியன்

சென்னை 23—2—'56 வியாழன்

காமராசர் என்ன செய்யப் போகிறார்?

மொழியை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்களைப் பிரித்தமைக்க வேண்டும் என்ற கருத்தை, பிப்ரவரி இருபதாம் நாள் கட்டுப்பாடாக தமிழ் நாட்டு மக்கள் வலியுறுத்திவிட்டனர்.

தேவிகுளம், பீர்மேடு போன்ற, தமிழர்களே பெரும்பான்மையினராக வாழும் திரு-கொச்சி தமிழ்ப் பகுதிகளை சென்னை தமிழகத்துடன் இணைக்கவேண்டும் என்ற கோட்பாட்டிற்கு, தங்கள் உள்ளக்கிடக்கையை தமிழ் மக்கள், அதே இருபதாம் நாள் வெளிக்காட்டி விட்டனர்.

சென்னை மாகாணம் என்ற பெயரை மாற்றி தமிழ் நாடு என்று பெயரிட வேண்டும் என்ற கொள்கையை, தமிழ் மக்கள் ஒருமனமாக உறுதி செய்துவிட்டனர்.

தமிழ்நாட்டின் எல்லைகளைத் திட்டவட்டமாக வரையறுப்பதற்கு ஒரு எல்லைக் குழுவை நியமிக்க வேண்டும் என்பதையும் தமிழர் ஏகோபித்துத் தெரியப்படுத்திவிட்டனர்.

தட்சிணப் பிரதேச கருத்தை ஒருக்காலும் ஒப்புக்கொள்ள முடியாது என்ற தங்கள் முடிவை, தமிழ் மக்கள் இருபதாம் நாள் அறிவித்திருக்கின்றனர்.

இவை, தமிழ் மக்களின் தீர்ப்பு—முடிவு; பிப்ரவரி இருபதாம் நாள் வேலைநிறுத்தத்தின் மூலம் வெளியானவை.

இம்முடிவுகளை, எக்காரணத்தைக்கொண்டும், தமிழ் மக்கள் இனி மாற்றிக்கொள்ளப்போவது கிடையாது. அவைகளைப் பெறுகின்ற வரையில் தமிழ் மக்கள் ஓய்வதும் கிடையாது.

தமிழ் மக்களின் ஒருமனமான இக்கோரிக்கைகள் நியாயமானவைகளேயாகும். இவைகளில், மற்ற மொழியினரைப் பாதிக்கக் கூடியவைகளோ பகைத்துக்கொள்ளக்கூடியவைகளோ எதுவும் இல்லை. எனவே மற்ற மொழி மக்களும் இவைகளுக்கு ஆதரவு காட்டவேண்டியதே முறையாகும்.

இக்கோரிக்கைகள் எதுவும் காங்கிரஸ் மூலக்கோட்பாடுகளுக்கு மாறுபட்டிருக்கவில்லை. இவை, காங்கிரஸ் கோட்பாடுகளேயாகும்.

எதிர்பாராவகையில் இவைகளைக் கைவிட காங்கிரஸ் மேலிடம் முன்வந்தது. எப்படியும் தம் மாற்று கோரிக்கைகளை, நிறைவேற்றிவிடுவது என்று அம்மேலிடம் துணிந்து நிற்கிறது.

எனவே, காங்கிரஸ் மேலிடத்திற்கு, அது செய்யும் தவறை சுட்டிக்காட்ட வேண்டியது தமிழ் மக்களின் நீங்காக் கடமையாகும். அக்கடமையைத்தான் தமிழ் மக்கள், பிப்ரவரி இருபதில் வெறும் காமாகச் செய்துகாட்டி இருக்கிறார்கள்.

காங்கிரஸ் மேலிடத்தாரின் புதியபோக்கைக், கொள்கைநீதியில் முதலமைச்சர் காமராசர் ஒப்புக்கொள்ளாதவராக இருந்தால், பிப்ரவரி இருபதில் அவர் என்ன செய்திருக்க வேண்டும்? தமிழ் மக்களின் வேலை நிறுத்தக் கிளர்ச்சியை, அவர் எவ்வாறு பொருள் கொண்டிருக்க வேண்டும்?

காங்கிரஸ் மேலிடத்தின் தட்சிணப் பிரதேச கோரிக்கையை, உண்மையிலேயே கனம் காமராசர் எதிர்ப்பவராக இருந்தால், பிப்ரவரி இருபதில் அவர் எவ்வாறு செயல்பட்டு இருக்க வேண்டும்?

மொழிவழி மாகாண அமைப்பு, தேவிகுளம்—பீர்மேடு இணைப்பு, சென்னைக்கு தமிழ் நாடு எனப் பெயரிடல், தட்சிணப் பிரதேச எதிர்ப்பு ஆகிய நான்கும், முதலமைச்சர் காமராசருக்கு உடன்பாடு உடையதாக இருக்குமானால், அவைகளை வலியுறுத்தத் தமிழ் மக்களால் மேற்கொள்ளப்பட்ட பொது வேலை நிறுத்தத்திற்கு அவர் ஒத்துழைத்திருக்க வேண்டும். கொள்கை அடிப்படையில் உடன்பாடு உடையவர்கள் அதைத்தான் செய்ய முனைவர்.

தாம் ஒத்துழைப்பதின் மூலம் காங்கிரஸ் மேலிடத்தின் கோபத்திற்கு ஆளாகவேண்டி இருக்குமே, அதை எவ்வாறு தாங்கிக்கொள்வது என்பதில் முதலமைச்சருக்கு அச்சமிருக்குமானால், பொது வேலைநிறுத்தம் குறித்து பேச்சுமூச்சில்லாமல் அவர் இருந்திருக்க வேண்டும். ஆனால், அவை இரண்டையும் அவர் செய்யத் தவறிவிட்டார்.

அந்த அளவில் அவர் நிற்கவில்லை. அதற்கு மேலும் சென்று, பொது வேலைநிறுத்தத்தைக் கைவிட்டுவிடும்படி ஆசை காட்டவும், மீறி நடத்தப்படுமானால் வேலை நிறுத்தத்தை முறியடித்துவிடுவதாக அச்சமூட்டவும் முதலமைச்சர் துணிந்துவிட்டார்.

ஆசை காட்டியதுடனும், அச்சமூட்டியதுடனும் முதலமைச்சர் திருப்திகொள்ளவில்லை; அடக்குமுறைகளை வீசி வேலைநிறுத்தத்தைத் தகர்த்தெறியவும் மூர்க்கத்தனமாக முயன்றிருக்கிறார்.

அவர் முயற்சி முழுத் தோல்வி கண்டது. தமிழ் மக்களின் நியாயமான கிளர்ச்சி முழு வெற்றி பெற்றுவிட்டது.

தமது வேண்டுகோளையும், அடக்குமுறைகளையும் முறியடித்துவிட்டு, பொது வேலைநிறுத்தம் முழு வெற்றி பெற்றுவிட்டதே என்று, இனியும் அவர் எண்ணிக்கிடப்பதில் ஒரு பயனுமில்லை. வேலைநிறுத்தத்தில் ஈடுபட்ட தலைவர்கள் மீது பழிவாங்கத் திட்டமிட்டுக்கிடப்பதிலும் பொருளில்லை.

தமிழ் மக்கள், பலத்த எதிர்ப்புக்கிடையிலும் வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டிய பொது வேலை நிறுத்தத்தை ஒரு கருவூலமாகக் கொண்டு, தமிழ் மக்களின் உள்ளக்கிடக்கையை, காங்கிரஸ் மேலிடத்திடம் ஆணித்தரமாக வற்புறுத்த வேண்டும். தமிழ் மக்களின் கோரிக்கைகளை, கொள்கைகளவில் அவர் ஒப்புக்கொள்வது உண்மையானால், அதை இப்பொழுது செய்ய அவர் முன்வர வேண்டும். அது தான் நியாயமுமாகும்.

அதைவிடுத்து, தமிழ்த் தலைவர்களைப் பழிவாங்கிக்கொள்ள திட்டம் தீட்டுவாரானால், அந்த அறைகூவலையும் ஏற்றுக் கொள்ள தமிழ் தலைவர்கள் தயாராகவே இருக்கிறார்கள். அதுபற்றி கனம் காமராசருக்கு கடுகளவு ஐயமும் இருக்கவேண்டாம் என எச்சரிக்கின்றோம். ஆட்சியாளர் வீசும் அடக்குமுறைகளைத் தாங்கிக்கொண்டு, உரிமைக்காகப் போராடும் நெஞ்சுரம் கனம் காமராசர் போன்றவர்களுக்குமட்டுமே ஏகபோக உரிமை அல்ல. அப்பண்பு, தமிழர்களின் பொதுச் செல்வம் என்பதை, தமது நெஞ்சில் முதலமைச்சர் பதியவைத்துக் கொள்ள வேண்டும்.

பொது வேலைநிறுத்தத்தின் மூலம் தமிழ் மக்கள் தீர்ப்பளித்துவிட்டார்கள்; அத்தீர்ப்பை மதித்து முதலமைச்சர் நடந்துகொள்ளப் போகிறாரா அல்லது அன்பர் ஆச்சாரியார் அடிச்சுவட்டைப் பின்பற்றி நடந்து அரசியல் மரணத்தை அடையப்போகிறாரா என்பதை இனித்தான் தமிழ்நாடு அறிந்து கொள்ளப்போகிறது.

ஆண்டில் 5 இலட்சம் பேர் பலியாகின்றனர்!

க்ஷயரோகத்தினால் ஏற்படும் மரண விகிதம் பற்றி திட்டக் குழு

பெருவாரியான அளவில் பி. சி. ஜி. தடை மருந்து குத்தும் முறையைக் கையாண்டால் இன்னும் 15 அல்லது 20 ஆண்டில் இந்தியாவின் க்ஷயரோக மரண விகிதம் ஐந்தில் ஒரு பங்காகக் குறைந்துவிடும் என்று திட்டக் குழு கருத்தறிவித்துள்ளது.

இந்தியாவில், மலேரியாவுக்கு அடுத்தபடியாக க்ஷயரோகம்தான் பிரதான சுகாதாரப் பிரச்சினையாக இருந்துவருகிறது; இந்தக் கொடிய நோயை ஒழிப்பதற்கு பி. சி. ஜி. தடை மருந்து சிறந்த வகையில் பயன்பட்டுவரும்.

பிரதி ஆண்டும், க்ஷயரோகத்திற்கு, இந்தியாவில் சுமார் 5 இலட்சம் பேர் பலியாகின்றனர்; சுமார் 25 இலட்சம் பேர் அவ்வியாதிகளினால் அல்லலுறுகின்றனர்; அதன் காரணமாக, நாட்டில் ஆண்டில் சுமார் 100 கோடி நபர்-நாட்கள் நஷ்டமாகிறது. பொருளாதார நஷ்டம் ஒருபுறமிருக்கையில், க்ஷயரோகம் காரணமாக மக்களுக்கு ஏற்படும் இன்னல் கொஞ்சமில்லை.

மேய்ச்சல் நிலத்தைக் கைப்பற்றினராம்!

ஆமதாபாத், பிப். 21—

சிந்து மாநிலத்தை ஒட்டியுள்ள இந்தியப் பகுதியான கட்சுக்குள், பாகிஸ்தான் இராணுவம் பலவந்தமாகப் பிரவேசித்து திட்டுப் பகுதியான ரானில் 7 மைல் நீளம், 4 மைல் அகலமுள்ள மேய்ச்சல் நிலத்தை கைப்பற்றியதாகக் கூறப்படுகிறது.

பலத்த ஆயுதங்களுடன் பாகிஸ்தான் இராணுவம் இந்தியப் பகுதிக்குள் புகுந்து, தானே இயங்கும் ஆயுதங்களால் இந்திய இராணுவ காவல் படையினரைத் தாக்கியதாம்.

பாகிஸ்தான் துருப்புகள் இந்தியப் பிரதேசத்திற்குள் உள்ள குழிகளில் மறைந்துகொண்டு இந்திய இராணுவக் காவற் படையினர் வழக்கமாகச் சுற்றிவரும் போது அவர்கள்மீது இயந்திரத் துப்பாக்கிகளால் சுட்டனராம்.

மலிந்து வரும் ஊழல்கள்

சர்க்காரின் காலங் கடந்த கண்விழிப்பு

"மாப்பிள்ளையைத் தேடி நிச்சயமான பின்புதான் முகூர்த்தம் வைப்பார்கள்; சாதாரண பழக்கத்தில் உள்ள வழக்கம் அது: அதைவிட வேறு வழியும் இல்லை. முகூர்த்தம் வைத்த பின்பு யாரும் மாப்பிள்ளையைத் தேட மாட்டார்கள். தொழில் விவகாரத்தில் பாரத சர்க்கார், முகூர்த்தத்தை வைத்துவிட்டுப் பிறகு மாப்பிள்ளையைத் தேட ஆரம்பித்திருக்கிறார்கள்!

"எவ்வளவோ ஊழல்களுக்குப் பின்பு சர்க்காருக்கு இப்பொழுது தான் ஒருவித உணர்ச்சி ஏற்பட்டுள்ளது. தங்களது தொழில்களை நடத்த நிர்வாகத் திறமையும், வர்த்தக நோக்கமும் உள்ள தகுந்த அதிகாரிகள் தேவை என்பதை உணர்ந்திருக்கிறார்களாம்; இதற்காக சில நடவடிக்கைகளையும் மேற்கொள்ளப்போவதாக மந்திரி திரு பி. என். தத்தார் மக்கள் சபையில அறிவித்துள்ளார்.

"இந்த உணர்ச்சி ஏற்பட (அதாவது விஷயம் தெரிந்தவர்களை வேலைக்கு வைக்க வேண்டுமென்பது...) எவ்வளவு ஊழல் அனுபவங்களைக் கடக்க வேண்டியிருந்தது?

"கூரையில்லாமல் தவிக்கும் இந்தியர்களைக் காப்பாற்ற ஒரு கோடி இருபது இலட்சம் ரூபாயில் 'ரெடிமேடு வீடு கட்டும் தொழிற்சாலையை நிர்மாணித்தார்கள் 2,470 ரூபாய் செலவில் ஒரு வீடு வீதம் வருடம் 5,500 வீடுகளை உற்பத்தி செய்வதாக இத்தொழிலின் திட்டம். ஆரம்பமான சில காலத்தில் இத்தொழிலில் 7,63,000 ரூபாய் நஷ்டம் ஏற்பட்டது; அடுத்த வருடத்தில் மீண்டும் ஏழு இலட்ச ரூபாய் நஷ்டமேற்பட்டது. இந்த இலட்சணத்தில், எதிர்பார்த்த வீடுகளும் வரவில்லை. இதைத் தொடர்ந்து, அம்பர்நாத் மிஷின் டூல் தொழிற்சாலை நஷ்டம், ஹிந்துஸ்தான் ஷிப்-யார்டு நஷ்டம் போன்றவைகளும் கிளம்பின. சமீபத்தில்தான் பக்ரா-நங்கலில் பத்துக் கோடி ரூபாய் ஊழல் வெளியாயிற்று; இத்துடன் கோனார் அணைத் திட்டத்தில் 175 இலட்ச ரூபாய் அதிகமாக செலவிடப்பட்டுள்ளதை ராவ் கமிட்டி சுட்டிக்காட்டியது.

"தாமோதர் திட்டத்திற்கு ரூ 37 கோடி 81 இலட்சம செலவில் முதலில் திட்டம் போட்டார்கள். பிறகு அதன் செலவு மதிப்பீடு 92 கோடி ரூபாய்க்கு உயர்ந்தது. இதில் ஒரு குறிப்பிட்ட கம்பெனிக்கு மட்டும் ஒரு கோடி 64 இலட்ச ரூபாய் அதிகமாகக் கொடுத்துவிட்டார்களாம். தாமோதர் திட்ட கார்ப்பரேஷனுக்கு ஏற்பட்ட நஷ்டத்தில் அதுவும் சேர்க்கப்பட்டது என்கிறார்கள். ஹிராகுட் அணைக்கட்டுக்கு 48 கோடி ரூபாயில் திட்டம் போட்டார்கள். அதன் செலவு மதிப்பீடு 92-கோடி ரூபாய்க்கும் அதிகமாக ஓடிவிட்டதாம்.

"அணைக்கட்டு திட்டங்கள் பற்றி ரிப்போர்ட் சமர்ப்பிக்க நிபுணர் கமிட்டி ஒன்றை சமீபத்தில் சர்க்கார் நியமித்தார்கள். இந்தக் கமிட்டியினர் விசாரித்து என்ன சொன்னார்கள்?

"அணைக்கட்டு, மின்சார உற்பத்தித் திட்டங்களுக்கான இயந்திரங்களில் 43 சதவிகிதம் (சுமார் பாதிக்குப் பாதி) சும்மா கிடக்கின்றனவாம். இந்த இயந்திரங்களின் மதிப்பு ஆறு கோடி ரூபாய்க்கும் அதிகமாக இருக்கும். போதுமான 'ஸ்பேர் பார்ட்ஸ்' இல்லாததுதான் இதற்குக் காரணம் என்று 'ரிப்போர்ட்' கூறுகிறது. இன்னும் ஜீப் ஊழல், ஏ. எம். சி. ஊழல், என். டி. சி. ஊழல் போன்றவை வேறு வெளிக்கிளம்பின.

"அகப்பட்டது இவ்வளவு என்றால், இனி அகப்படாமல் போனது எவ்வளவு ஊழல்கள் என்பது யாருக்குத் தெரியும்?

"இவ்வளவு தூரம் அடிபட்ட பின்புதான், 'தொழில் நிர்வாகத்தை நடத்தத் தகுதியான ஆட்கள் தேவை' என்ற உணர்ச்சி சர்க்காருக்கு ஏற்பட்டுள்ளது இவ்வளவு காலம் கடந்தாவது இந்த உணர்ச்சி ஏற்பட்டதென்பதற்காக சர்க்காரைப் பாராட்ட வேண்டும்.

"'ஊழல் மலிந்தாலும், யாருக்காவது க்ஷேமமலமும் மலிந்துவிடுகிறது சார்......' என்று என் ஆபீஸ் பையன் வேறு அவனது நோக்கில ஆரம்பிக்கிறான்.

—20-2-56 'நவ இந்தியா' இதழில் 'ஊர் வம்பு' என்ற பகுதியில், 'யூ ஆர்.' என்பவர் எழுதியுள்ள கட்டுரையின் ஒரு பகுதிதான் மேலே தரப்பட்டிருப்பதாகும்.

கிடைத்துவிடுமாம்!

அலகாபாத், பிப். 20—

"சீக்கிரமோ, தாமதித்தோ கோவா இந்தியாவிற்கு கிடைத்துவிடும்"

என்று, இந்தியாவிலுள்ள பாகிஸ்தான் ஹைகமிஷனர் ஜனாப் அலிகான் பல்கலைக் கழக மாணவக் குழாமில் கூறியுள்ளார்.

நிபந்தனையுடன் உதவி?

வாஷிங்டன், பிப். 20—

"தொழில் துறையில் முன்னேற முனையும் இந்தியாவின இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு எந்த அளவில் உதவி செய்தாலும், அது திட்டத்தின் இலட்சியத்திற்காக இருக்க வேண்டும்; 10 கோடி டாலர் தருவது நன்றெனப்படுகிறது; 5 அல்லது 7 கோடி டாலர் தான் என்றால், அதையும் 2-வது திட்டத்திற்கேற்றவாறு அளிக்கலாம். இந்தியாவிற்கு அமெரிக்க உதவி பலனளித்திருக்கிறது"

என்று, இந்தியாவில் அமெரிக்கத் தூதுவர் ஜான் ஷெர்மன் கூப்பர் குறிப்பிட்டுள்ளார்.

உலக பாங்கி நிதி உதவி?

இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்கு உலக பாங்கியிடமிருந்து இந்தியாவிற்கு எவ்வளவு உதவி தேவை என்பது பற்றி விவாதிக்க சர்வதேச பாங்கியின் குழு ஒன்று விரைவில் இந்தியாவந்து சேருமாம்.

வெளியேற்றப்படுவோர் நிலை என்ன?

எந்தவிதத்திட்டமும் இல்லையென மக்கள் சபையில் அறிவிப்பு

புது டில்லி, பிப். 21—

1955 நவம்பர் 19-ந் தேதிவரையில் இலங்கை சர்க்காரின் வெளியேற்றத் திட்டத்தின் கீழ் 7,591 'இந்தியர்கள்' நாடு திரும்பியுள்ளனர்.

இலங்கையிலிருந்து தாயகம் வருவோரின் புனர் வாழ்விற்காக சர்க்கார் இதுவரையில் எந்தவிதமான திட்டமும் தயாரிக்கவில்லையாம்.

1955 அக்டோபர், நவம்பர் மாதங்களில் 7 379 குடி உரிமை மனுக்கள்தான் முடிவு செய்யப்பட்டுள்ளதென்றும், இன்னும் 1,66,870 மனுக்கள் முடிவு செய்யப் படாமலிருக்கிறதென்றும் மக்கள் அவையில் தகவல் தரப்பட்டுள்ளது.

சென்னை சர்க்காரிடம் நகர சபை கோரிக்கை

சென்னை பிப். 22—

சைகிள் வரியை நீக்கிவிட அனுமதிக்குமாறு, சென்னை நகரசபை சர்க்காரிடம் கேட்டுள்ளது.

'நகரில் சைகிள் வைத்திருக்கும் ஏழைகள், நடுத்தர மக்களுக்கு வரி ரத்து பெரிதும் துணையாக இருக்கும்' என, நகர சபை ஏகமனதாகத் தீர்மானித்துள்ளது.

கழகச் செய்திகள்

திருவாவடுதுறை தி.மு.க.

துவக்க விழாப் பொதுக்கூட்டம்

16—1—56ல், திருவாவடுதுறை தி மு கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம் தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றது.

தோழர் கோ. சி மணி கழகக் கொடியை ஏற்றிவைத்தார்.

தோழர் என் சி. பன்னீர்செல்வம் அண்ணா அவர்களின் உருவப் படத்தைத திறந்துவைத்தார்.

தோழர்கள் டி ஏ. இராமசாமி, ஆர். பாலகுருசாமி ஆகியோர் பேசினர்.

சேத்தூர் தி. மு. கழகத் துவக்க விழா

4—2—56 அன்று, சேத்தூரில் தி மு கழகத் துவக்க விழாப் பொதுக்கூட்டம், தோழர் சவுந்திரசாமி தலைமையில் நடைபெற்றது தோழர்கள் என் கிட்டப்பா, தி மு கழகத் துணைப் பொதுச் செயலாளர் என் வி. நடராசன் ஆகியோர் கழகக் கொள்கையினை விளக்கி உரை நிகழ்த்தினர்.

மாயூரம் நகர தி. மு. க.

3—2—56 இரவு மீனாட்சிசுந்தரம் சைக்கிள் கடையில், மாயூரம் நகர தி மு. கழகச் செயற் குழுக் கூட்டம், தோழர் என். கிட்டப்பா தலைமையில் நடைபெற்றபோது, தி மு க. பொதுக்குழு முடிவுகளை வரவேற்றும், மற்றும் சில முடிவுகளும் செய்யப்பட்டன.

லால்குடி தி. மு. கழகம்

14—1—56ல், தி. மு. கழகச் சார்பில் பொங்கல் விழா தோழர் தங்கராஜ் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் ஏ. பி தருமலிங்கம், அ பொன்னம்பலனார் சொற்பொழிவாற்றினர்

மாலை 6 மணிக்கு வெள்ளனூர் தி மு கழகச் சார்பில் தோழர் அ பொன்னம்பலனார் தலைமையில் தோழர் அனீபா குழுவினரின் இன்னிசையினிது நடைபெற்றது.

எட்டயபுரம் தி. மு. கழகம்

16—1—56ல், தோழர் மு. நடராசன் தலைமையில், கழகச் சார்பில் நடைபெற்ற பொங்கல் விழாக் கூட்டத்தில் தோழர்கள் அபிசேக மன்சூர், திராவிடமணி, எஸ். லிங்கன், தி. ராமசாமி, மே. க. முத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்

ஆலந்தூர் தி. மு. கழகம்

5—2—56 மாலை 6 மணிக்கு. ஆலந்தூர் தருமராசா கோவில் முன்பு, கழக ஐந்தாம் ஆண்டு ஆண்டு துவக்க விழாப் பொதுக் கூட்டம் தோழர் எம் ஆர். கோவிந்த் தலைமையில் நடைபெற்றபோது, தலைவரவர்கள் தேவிகுளம்—பீர்மேடு தென்னகத் தோடு சேரவேண்டும் என்றும், உள்ளூர் பஞ்சாயத்து போர்டின் நிர்வாக சம்பந்தமுள்ள குறைகளை போக்கவேண்டும் என்றும் கூறினார்.

பின்னர், தோழர்கள் சி. பி. சிற்றரசு, இளம்பரிதி ஆகியோர் தேவிகுளம்—பீர்மேட்டில் தமிழர்கள், எவ்வாறு குடியேறினார்கள் என்பதையும், நேருவின் தீர்ப்பு தமிழர்களுக்கு எப்படி அநீதியாய் இருக்கிறது என்பதனையும், விளக்கிப் பேசினர்.

துறையூர் தி. மு. கழகம்

12—2—56 மாலை 6 மணிக்கு அரண்மனை பிள்ளையார் கோவில் முன்பு தி. மு. கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், தோழர்கள் ஏ வி. பி. ஆசைத் தம்பி, நெடுமாறன், முத்துகருப்பன், அழகமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

சென்னை 38-வது வட்ட தி. மு. கழகம்

12—2—56 மாலை 6 மணியளவில், கிளைக் கழகக் கட்டிடத்தில் தோழர் நீல-நாராயணன் தலைமையில் தோழர் மு குப்புசாமி அண்ணா படத்தைத் திறந்துவைத்தார். தோழியர் அலமேலு-அப்பாதுரை, தோழர்கள் அன்பரசு, சே. மு. காதர், க. வீரபாண்டியன் மற்றும் பல வட்டத் தோழர்கள் பேசினர்.

பெரியகுளத்தில் தி. மு. க. பொதுக்கூட்டம்

15—1—56 மாலை 4 மணிக்கு தோழர் ஏ. எஸ் அனீபா தலைமையில், பஸ் நிலையத்திலிருந்து மாபெரும் ஊர்வலமொன்று புறப்பட்டு. பெரியார் திடலை வந்தடைந்தது; அங்கு தோழர் கே எம் எம் மேத்தா தலைமையில், தோழர் அரசுக்கண்ணன், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் ஆகியோர் பேசினர்; இருவருக்கும் பெரியகுளம் தி மு. கழகச் சார்பிலும், வடுகபட்டி, மேல்மங்கலம். தேவதானப்பட்டி தி மு. கழகங்கள் சார்பிலும் கைத்தறி துணிகள் வழங்கப்பட்டது.

• • •

பெயர் சூட்டல்

தோழர் வி. கந்தசாமி அவர்களின் குமாரனுக்கு 'செங்குட்டுவன்' எனப் பொதுச் செயலாளர் பெயரிட்டார். இதன் நினைவாக 'நம் நாடு' வளர்ச்சிக்கு ரூ 1 அன்பளிக்கப்பட்டது —வரப்பெற்றோம்—நன்றி—பொறுப்பாளர்.

திருச்செங்கோடு தி. மு. க. பொதுக்கூட்டம்

15—2—56 மாலை 7 மணிக்கு இவ்வூர் 40 கால் மண்டபத்தின் முன் ஓர் பொதுக்கூட்டம் தோழர் தி. ச. தங்கவேல் தலைமையில் நடைபெற்றது. தோழர் சி. பி. சிற்றரசு சமுதாய சீர்திருத்தம் பற்றியும், தேவிகுளம், பீர்மேடு பகுதிகள் தாய்த் தமிழகத்தோடு சேர வேண்டிய காரணங்களைக் கூறியும், திராவிட நாடு பிரிய வேண்டிய அவசியம் பற்றியும் பேசினார்.

காஞ்சீபுரம் தி. மு. கழகம்

5—2—56 காலை 11 மணிக்கு 'திராவிட நாடு' நிலையத்தில், காஞ்சிநகர தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் தோழர் கே.டி எஸ் தலைமையில் நடைபெற்றபோது: செயலாளர் தோழர் டி. சபாபதியின் இராஜினாமாவை ஏற்றுக் கொண்டும், அவருடைய பணிக்கு நன்றி தெரிவித்துக்கொண்டும், அடுத்த செயலாளரைத் தேர்ந்தெடுக்கும் வரையில் தற்காலிகமாக நகர தி. மு. கழகச் செயலாளராக தோழர் இ. எத்துராசு அவர்களைத் தேர்ந்தெடுத்தும், வரவு-செலவு கணக்குகள் பரிசீலனை செய்யப்பட்டு கையிருப்பாக ரூ. 62—9—2-ம் ஒப்புக்கொண்டும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன

புயல் நிவாரண நிதி

19—2—56ல், திருக்கழுக்குன்றம், தி. மு., கழகச் சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில், புயல் நிவாரண நிதிக்காக தோழர் சி. பி. சிற்றரசு அவர்களிடம் தரப்பட்ட ரூ 87-ம் வரப் பெற்றோம்—தி. மு க. தலைமை நிலையம்.

மதுரை மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம்

12—2—56ல், மதுரை மாவட்ட தி. மு. க. செயற்குழுக் கூட்டம் தெற்கு மாசி வீதி பச்சரிசிக்காரத் தெரு, திருமண விடுதியில் செயலாளர் எஸ். முத்து அவர்கள் தலைமையில் நடைபெற்று முடிவுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

அன்று மாலை 5 மணிக்கு அழகரடியிலிருந்து 10,000 பேர் கொண்ட ஊர்வலம் புறப்பட்டு நான்கு மாசி வீதிகள் சுற்றி திலகர் திடல் வந்தடைந்தது; அங்கு தோழர் எஸ் முத்து தலைமையில் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

டாக்டர் அருணாசலம் அவர்கள் மக்கள் ஆட்சி முறை பற்றி சொற்பொழிவாற்றினார்.

பின்னர், தோழர் ஈ வெ கி. சம்பத் அவர்கள் விரிவுரையாற்றினார்.

ஆனகாபுத்தூர் தி. மு. க. பொதுக்கூட்டம்

15—2—56ல், கழகச் சார்பில், ஓர் பொதுக்கூட்டம் தோழர் ஆர் புரட்சிமணி தலைமையில் நடைபெற்றது தோழர்கள் சி. இராமலிங்கம், ஜி. கே. சாமி, கந்தசாமி, பா. ராஜு ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்.

ஆத்தூர் தி. மு. கழகம்

4—2—56 இரவு 7 மணிக்கு. ஆத்தூர் தி மு. க. செயற்குழுக் கூட்டம், தோழர் ஏ. நாச்சிமுத்து கடையில் நடைபெற்றபோது, தோழர் டி. கே மாதவன் துணைவியார் இயற்கை எய்தியமைக்கு அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சோழவந்தான் தி. மு. க.

8—2—56 இரவு 7-30 மணிக்கு கழக உறுப்பினர்கள் கூட்டம் நாடார்பேட்டையில் தோழர் ச. பழனியாண்டவன் தலைமையில் நடைபெற்றபோது, செயலாளர் கா. செல்லச்சாமி, துணைச்செயலாளர் கா. காளியப்பன் இருவருடைய விலகல் கடிதத்தை பரிசீலனை செய்து ஒப்புக்கொள்ளப்பட்டது பின்னர், தோழர்கள் எஸ். செல்லத்துரை செயலாளராகவும், கூ. குருசாமி துணைச் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

பாண்டுப்-பம்பாய் தி.மு.க.

31—1—56 இரவு 8 மணிக்கு, தோழர் தியாகராசன் தலைமையில் நடைபெற்ற பாண்டுப் கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில், தோழர் கா. சு. சேதுராமன் துணைச்செயலாளராகவும், தோழர்கள் பி. எஸ். அற்புதம், என் கோவிந்தசாமி ஆகியோர் பொதுக் குழு உறுப்பினர்களாகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

குன்றத்தூரில் 5,500 நெசவாளர் வேலை செய்யவில்லை

பிப். 20—அர்த்தால் பெரும் வெற்றி

குன்றத்தூரில் 5,000 நெசவுத் தொழிலாளர்களும், 500-பாவு தோயும் தொழிலாளர்களும் பிப்ரவரி 20-ல் வேலை செய்யவில்லை. அன்று ஊரில் உள்ள 200-க்கு மேற்பட்ட கடைகளும் மூடிக் கிடந்தன. ஐந்து நெல் அரைக்கும் ஆலைகளும், ஆரம்பப் பள்ளிகளும் மூடிக்கிடந்தன.

காலையிலேயே 2,000-க்கும் அதிகமான மக்கள் கொண்ட ஊர்வலம் பெரிய தெருவிலிருந்து புறப்பட்டு முக்கிய வீதிகள் வழியாக வந்தது. பின் உறுதி மொழி வாசிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முதல் நாள் இரவே தி. மு. கழகத் தோழர்களான டி. கே. சிவகுமாரன், டி. என். சம்பந்தம், கணபதி முனிசாமி, கண்ணப்பன், கே. சம்பந்தம் ஆகிய ஆறு பேர்களும் கைது செய்யப்பட்ட போதிலும் வெகு அமைதியாக ஊர்வலமும், அர்த்தாலும் நடைபெற்றன. (ந.நி)

10,000 கைத்தறியாளர் கழகத்திற்குக் காட்டிய நன்றி

கரூர் பொது வேலைநிறுத்தத்தில் பங்கு பெற்றனர்

கரூரில் 10,000 நைத்தறித் தொழிலாளர்கள், தங்களுக்குத் தி. மு. கழகம் காட்டிவரும் பேராதரவை மனதில் கொண்டு, தி. மு. கழகம் சார்ந்திருக்கும் கூட்டணியின் வேண்டுகோளுக்கு ஒப்ப பிப். 20-ல் வேலை செய்யாது ஓய்வு பெற்றிருக்கின்றனர்.

வெற்றிகரமாக நடைபெற்ற பொதுவேலை நிறுத்தத்தில் கரூர் ஆலையைச் சேர்ந்த தொழிலாளர்கள் 75 சதவிகிதம் பேர்கள் கலந்துகொண்டனர்.

கூட்டணியைச் சேர்ந்த 60 தோழர்கள் (பெரும்பாலானோர் தி. மு. கழகம்) கைது செய்யப்பட்டனர். நகரில் 144 தடையுத்தரவு விதிக்கப்பட்டிருக்கிறது.

கரூர் உதவி மாவட்ட நிர்வாக அதிகாரி, நகரில் அமைதியாகப் பொதுவேலை நிறுத்தம் நடைபெற்றதற்காகத் தோழர்களைப் பாராட்டினார் என்று தெரியவருகிறது.

ஆர். இராதா, என். ஆர். இராமசாமி முதலிய ஏராளமான கழகத் தோழர்களும், இதர கட்சியினருமாக 60 பேர் வரை கைது செய்யப்பட்டு, பின்னர் விடுவிக்கப்பட்டிருக்கின்றனர்.

'அர்த்தால் கூடாது' என்று காங்கிரசார், தீவிரமாக முயற்சித்தும், பிரச்சாரம் செய்தும், தோல்வி கண்டிருக்கின்றனர். கூட்டணித் தோழர்களின் நேரிய முயற்சி வெற்றிபெற்றிருக்கிறது.

பிப்ரவரி 20-பெற்ற பெரும் வெற்றி

தமிழக சர்வ கட்சிக் கூட்டணியினர் வேண்டுகோளுக்கு இணங்க, டெல்லியின் அநீதிக்கு—நயவஞ்சகத்திற்கு—சதிக்கு எதிராகத் தமிழகமெங்கணும் பிப். 20-ந் தேதியன்று மகத்தான வெற்றியுடன் பொது வேலைநிறுத்தம் நடைபெற்றிருக்கிறது.

கடையடைப்பு, பஸ் போக்குவரத்து நிறுத்தம், பள்ளிகள், ஆலைகள் மூடுவிழா போன்ற நிகழ்ச்சிகள் தமிழகத்தின் எல்லா சிற்றூர்-பேரூர் நகரங்கள், பட்டிதொட்டிகளில் எல்லாம் நடைபெற்றிருக்கின்றன. இட நெருக்கடி கருதி, அந்த நிகழ்ச்சிகளின் சாரத்தை மட்டும் இங்கு தருகிறோம்.

பல ஊர்களில் ஏராளமானோர் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். முடிந்தவரையில் விபரங்கள் தரப்பட்டிருக்கின்றன.

பால்செட்டிசத்திரம்

பொது வேலைநிறுத்தம் அமைதியாக நடைபெற்றது. கடையடைப்பு நடைபெற்றதுடன், நெசவாளர்களும், விவசாயிகளும், மாணவர்களும் முழு ஒத்துழைப்பு தந்தனர். ஊர்வலத்திற்குத் தோழர் கே. ரங்கநாதன் தலைமை தாங்கினார். ஊர்வல முடிவில் தோழர் கே. சின்னகுழந்தை தலைமையில் 'அர்த்தாலும் அரசியலும்' என்பதைப் பற்றி தோழர்கள் பலர் பேசினர்.

விருத்தாசலம்

காலை 8 மணி யளவில், நகரின் பல பகுதிகளிலும் அமைதியான முறையில் ஊர்வலம் நடைபெற்று முடிவில் வானொலி திடலில், உறுதி மொழிகள் வாசிக்கப்பட்டு கூட்டம் முடிவுற்றது.

பட்டுக்கோட்டை

எல்லாக் கடைகளும் அடைக்கப்பட்டு அர்த்தால் மேற்கொள்ளப் பட்டது. மாலை 6 மணிக்கு காசாங்குளம் வடகரையில் தோழர் கே. அருணாசலம் தலைமையில் ஒரு பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில், தோழர்கள் பலர் சொற்பொழிவாற்றினார்கள். தமிழரின் உறுதி மொழி படிக்கப்பட்டு, கூட்டம் முடிவடைந்தது.

நாகூர்

கடைகள் யாவும் திறக்கப்படவில்லை. தேசிய உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் 200-க்கு மேற்பட்டோர் அன்று பள்ளிக்குச் செல்லவில்லை. தலைமை ஆசிரியரின் கடும் எதிர்ப்பையும் தீவிரமாக சமாளித்து அர்த்தாலை அமைதியுடன் நடத்தினர்.

திருவத்திபுரம்

பஸ், அர்பன் பாங்கி, மாவட்ட நூல் நிலையம், ஊராட்சி மன்ற அலுவலகம், கூட்டுறவு பால் நிலையம், உயர் ஆரம்பப் பள்ளி நிலையங்கள், கடைவீதி, சினிமா முதலியவைகள் இயங்கவில்லை

காலை முதற்கொண்டு தி. மு கழகம், தமிழரசுக் கழகம், சோஷலிஸ்டுக் கட்சிகளைச் சேர்ந்த தொண்டர்களும் பொதுமக்களும் ஊர்வலமாகச் சென்று வெற்றிகரமாகப் பொதுவேலை நிறுத்தத்தை நடத்தினார்கள்.

திருவாரூர்

வியாபாரிகள், பொதுமக்கள் யாவரும் பூர்ண கதவடைப்பு—பொது வேலைநிறுத்தம் செய்தார்கள். அன்று விவசாயிகள், தொழிலாளர்கள், பொதுமக்கள் ஆகியோர் சுமார் 3000 பேர் கொண்டவர்கள் ஊர்வலம் நடைபெற்றது.

அன்று மாலை கீழவீதியில், திரு. கருணை எம். ஜமால் தலைமையில் கூடிய கூட்டத்தில், தோழர்கள் பலர் பேசிய பின் மணலி-கந்தசாமி எம். எல். ஏ., சர்வகட்சிக் கூட்டணி உறுதி மொழியைப் படித்தார்; மக்கள் அதைப் பின்பற்றி உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்.

புதியம்புத்தூர்

எல்லாக் கடைகளும் மூடப்பட்டன; மாணவர்கள பள்ளிக்குச் செல்லவில்லை; பஸ் ஓடவில்லை; பொது வேலைநிறுத்தம் மிக அமைதியாக நடைபெற்றது. மாலை 5 மணிக்கு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டு முடிவில் கூட்டணி உறுதிமொழி வாசிக்கப்பட்டது.

கந்தர்வகோட்டை

திங்கட்கிழமை தோறும் நடைபெறும் வாரச் சந்தை நின்றுவிட்டது. அமைதியுடன் பொது வேலை நிறுத்தம் நடைபெற்றது.

பரமக்குடி

பரமக்குடி அர்த்தால் எவ்வித அசம்பாவிதமுமின்றி அமைதியான முறையில் நடைபெற்றது. பார்ப்பனர்களின் ஓட்டல்கள் மூன்றும், காங்கிரஸ்காரர்களின் கடைகள் சிலவும் தவிர மற்றைய கடைகள் அனைத்தும் மூடப்பட்டன. அரசாங்க உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், எ. சி. எ வி உயர்நிலைப் பள்ளி மாணவர்களும், அர்த்தாலில் கலந்துகொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது.

காலை 6 மணிக்கு, தோழர் எம். ஏ. வகாப் தலைமையில் ஊர்வலம் ஒன்று நடைபெற்றது.

மாலை 5 மணிக்கு, தோழர் சண்முகம் தலைமையில் மாபெரும் ஊர்வலம் நகரின் முக்கிய வீதிகளில் வலம் வந்தது. மாலை 7-மணிக்கு பெருமாள் கோவில் முன்பாக உறுதி மொழியினை எடுத்துக் கொள்ளப்பட்டது.

‘தட்சிண பிரதேச’ யோசனை

காமராசர் நிராகரிக்கவில்லை?

மைசூர் முதன் மந்திரி தகவல்

பெங்களூர், பிப். 21—

“தட்சிணப் பிரதேச யோசனையை சென்னை முதலமைச்சர் அடியோடு நிராகரித்துவிட்டது உண்மைதானா?” என்று, மைசூர் சட்டசபையில் கேள்வி எழுப்பப்பட்டபோது, முதலமைச்சர் அனுமந்தையா குறிப்பிட்டதாவது :—

“சென்னை முதலமைச்சர் அவ்விதத் திட்டவட்டமான முடிவுக்கு வந்துவிட்டாரென்று அவ்வளவு உறுதியாகச் சொல்ல முடியாது.”

கே: தட்சிண பிரதேசம் அமைக்கும் எண்ணம் பிறந்த பிறகு அது பற்றிய முன்னேற்றம் உண்டா?

ப: இன்னமும், பேச்சுவார்த்தை கட்டத்திலேயே இருக்கிறது.

மேலும் பல கேள்விகளுக்குப் பதிலளிக்கையில், முதலமைச்சர் குறிப்பிட்டதாவது :—

“மண்டலவாரியாக மாநிலங்களை அமைக்கலாமென்ற யோசனை முதலமைச்சர் நேருவிடமிருந்து பிறந்ததாகும்; ‘பெரிய மாநிலங்களாக அமைப்பது நல்லதல்லவா?’ என்று, பிரதமர் நேரு நாடு முழுமையும் கேட்டிருந்தார். பெங்களூரில் சென்னை, மைசூர், திரு—கொச்சி முதலமைச்சர்களைக் கூட்டுவதற்கு எவரும் ‘கன்வீனர்’ கிடையாது; நாங்களாகவே சந்தித்தோம்.”

மலேயா கம்யூனிஸ்டுகளுக்கு முதன் மந்திரி அறைகூவல்!

கோலாலம்பூர், பிப். 22—

‘உள்நாட்டுப் பாதுகாப்பு, தற்காப்பு இவற்றை மலேயா சர்க்காரிடம் ஒப்புவிக்க பிரிட்டிஷ் சர்க்கார் சம்மதித்துவிட்டதால், கம்யூனிஸ்டு தலைவரான சின் பெங், தாம் முன்பு உறுதி அளித்தபடி, எல்லா ஆயுதங்களுடனும் சரணடைந்துவிடவேண்டும்,’ என்று மலேயா முதன் மந்திரி தெங்கு அப்துல் ரஹ்மான் வானொலியில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

‘உள்நாட்டுப் பாதுகாப்பு, தற்காப்பு இவற்றை மேற்கொள்ளும் அதிகாரத்தை தெங்கு அப்துல் ரஹ்மான் பெறமுடியுமானால், தாம், தமது சகாக்களுடன் சரணடைந்துவிடத் தயார்,’ என்று சின் பெங், மலேயா கம்யூனிஸ்டுக் கட்சி பொதுச்செயலாளர் என்ற முறையில், கடந்த டிசம்பர் திங்களில், பெய்லிங் எனுமிடத்தில் மலேயா சர்க்காருடன் நடத்திய சமசரப் பேச்சுக்களின்போது தெரிவித்ததாகவும் முதன் மந்திரி குறிப்பிட்டிருக்கிறார்.

“இப்போது நானே உள்நாட்டுப் பாதுகாப்பு, தற்காப்பு இலாகாக்களை மேற்கொள்ளுகிறேன்,” என்றும் அவர் குறிப்பிட்டார்.

‘சின் பெங் மீண்டும் என்னைச் சந்திக்க விரும்பினால், அது, அவர் எப்போது — எங்கு — ஆயுதங்களுடன் சரணடைகிறார் என்பதை முடிவு செய்வதற்காகவே இருக்க முடியும்,’ என்று முதன் மந்திரி கூறியிருக்கிறார்.

ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் பல்லாயிரம் மக்கள் அணிவகுப்பு

திருச்சி அர்த்தால் விவரங்கள்

திருச்சி நகரெங்கும் அமைதியாகப் பொது வேலைநிறுத்தம் செய்யப்பட்டு மாலை 4 மணிக்கு, திருச்சி மெயின் கார்டு கேட்டிலிருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் தோழர் ஈ. வெ. கி. சம்பத் தலைமையில் அமைதியாக மேலப்புலிவார்டு ரோடு வழியாகச் சென்று, மணிக்கூண்டு — பெரிய கடைவீதி—சின்னகடை வீதி வழியாக வன்னி மரத்தடிக்கு; பலத்த போலீசு பாதுகாப்பு பின்தொடர வந்து சேர்ந்து, சர்வ கட்சி கூட்டணியின் உறுதி மொழியினை மக்கள் அனைவரும் எடுத்துக் கொண்ட பின் அமைதியாகக் கலைந்தனர்.

திருச்சி நகரில் உள்ள பெண்கள் கல்லூரி, சீதாலக்ஷ்மி ராமசாமி கல்லூரி, புனித சிலுவை கல்லூரி ஆகியவை மட்டும் முன்னதாகவே, ‘பிப். 20—கல்லூரி கிடையாது’ என்று அறிவித்துவிட்டனர்; தேசியக் கல்லூரியில் மாணவர்கள் ‘ஆஜர்’ பட்டியல் மட்டும் கொடுத்துவிட்டு வெளியேறினர்; அர்ச் சூசையப்பர் கல்லூரி, ஜமால் முகமது கல்லூரி மாணவர்கள் பலரும், மற்றும் பல கல்லூரி மாணவர்களும் அர்த்தாலில் பங்கு கொண்டனர்.

திருச்சி நகரில் உள்ள பெரிய கடைவீதி, சைனுபசார், காந்தி சந்தை, பாலக்கரை, தென்னூர், புத்தூர், உறந்தை ஆகிய பகுதிகளில் உள்ள பெரும் பெரும் கடைகளும், சிறிய கடைகளும், ஓட்டல்களும் அடைக்கப்பட்டன. நகரில் உள்ள பற்பல தொழிற்சாலைகளும் மூடப்பட்டன; பெருவாரியான சினிமாத் தியேட்டர்களும் காட்சிகளை நிறுத்தின; காய்கறிக் கடைகளும் மூடப்பட்டிருந்தது.

கட்சி வேறுபாடின்றி சகல கட்சி தோழர்களும் தங்கள் கடைகளை அடைத்துவிட்டார்கள்: திருச்சி நகரெங்கும் அமைதியே நிலவியது; இதுபோன்ற அமைதி இதுவரையில் ஏற்பட்டது கிடையாது.

அன்று மாலை நடைபெற்ற ஊர்வலத்தில் சகல கட்சித் தோழர்களும், மாணவர்களும், தொழிலாளர்களும், வியாபாரிகள் அனைவரும் இலட்சக்கணக்கில் அணிவகுத்து, மாபெரும் ஊர்வலம் நடத்தி, உறுதிமொழி எடுத்துக் கொண்டு அமைதியாகக் கலைந்தனர்.

19-ந் தேதி இரவு சுமார் 11 மணிக்கு, திருச்சி நகர கூட்டணித் தோழர்கள் எம். எஸ். மணி (தி. மு. க), ஆர். நாகசுந்தரம் எம். சி. (தி. மு. க.), பி. ஆர். ராமசாமி (சோஷ), நாகையன் (தமிழரசுக் கழகம்) ஆகிய நால்வரையும் போலீசார் கைது செய்தனர். உறையூரில் தோழர் லட்சுமணன், மற்றும் பல தொண்டர்களும், திருச்சி நகரில் பல பகுதிகளில் உள்ள தொண்டர்களும் கைது செய்யப்பட்டனர். பொன்மலை, திருச்சி, திருவானைக்கோவில், திருவரம்பூர், ஸ்ரீரங்கம் பகுதிகளிலும் சில தோழர்கள் கைது செய்யப்பட்டனர்.

பிப். 20—விளம்பரம் செய்யச் சென்ற தி. மு. கழகத் தொண்டர்களான பழனி, இராமசாமியும் கைது செய்யப்பட்டனர்.

திருச்சி மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் ஏ. பி தர்மலிங்கம், 19—2—56ல், லால்குடி பின்னவாசல் கூட்டத்தில் பேசிவிட்டு வந்தவுடன் போலீசாரால் கைது செய்யப்பட்டு லால்குடி சிறைக்கு அனுப்பப்பட்டார். நகரில் போலீசு பாதுகாப்பு பலமாகச் செய்யப்பட்டிருந்தது. திருச்சி கூட்டணித் தலைவர்களை 151 பிரிவுப்படி சிறைப்படுத்தியுள்ளார்கள்.

பொன்மலை:

இரயில்வேத் தொழிலாளர்கள் சர்வகட்சிக் கூட்டணியின் வேண்டுகோளுக்கிணங்க தி. மு. க., கம்யூனிஸ்டுக் கட்சி, சோஷலிஸ்டு கட்சி கூட்டணி அமைத்து, அதன் வேண்டுகோளுக்கு இணங்க 20—2—56ல், காலை ½ மணி நேரம் தாமதித்து வேலைக்குச் சென்று ‘பேட்ச்’ அணிந்து அர்த்தாலில் கலந்துகொண்டார்கள்.

மாலை 5 மணிக்கு நேராக வ. உ. சி. மைதானத்தில் பொன்மலைப்பட்டி பஞ்சாயத்து போர்டு தலைவர் தோழர் இராஜமணி தலைமையில் ஒன்று திரண்டு சர்வகட்சிக் கூட்டணியின் உறுதி மொழியை ஏற்றபின், அமைதியாகக் கலைந்து சென்றனர்.

கடைகள் எல்லாம் மூடப்பட்டு, அர்த்தாலில் பங்கு பெற்றன.

19-ந் தேதி இரவு தி. மு. கழகச் செயலாளர் துரைராசு, தோழர்கள் மாணிக்கம், தங்கவேலு ஆகியோர் திருவரம்பூர் போலீசாரால் கைது செய்யப்பட்டு, ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.

திருவரம்பூரில், நான்கு தி மு. கழகத் தோழர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

★★★★-★★★★★-★★★★★★★

பச்சையப்பன் கல்லூரி

மன்ற நிறைவு விழாவில்

அண்ணா

24-2-56 மாலை 4-30 மணிக்கு, மேற்படி விழா, கல்லூரிக் கட்டிடத்தில் தோழர் பி. ஆர். கிருட்டிணன் தலைமையில் நடைபெறும்.

அண்ணா அவர்கள் சிறப்புரையாற்றுவார்.

★★★★★★★★★★-★★★★-★★★

அறிவிப்பு

கடந்த ஒரு வார காலமாக அர்த்தால் பற்றிய செய்திகளை அப்போதைக்கப்போது வெளியிட வேண்டி, செய்திகளைச் சேகரித்து அன்றுடம் இதழ்களை அச்சிட்டனுப்ப வேண்டியிருந்ததால், குறிப்பிட்ட நேரம் தவறி சில நாட்களில் இதழ்களை அனுப்ப வேண்டி ஏற்பட்டுவிட்டது என்பதையும், தாமதத்திற்கு பொறுத்தருளுமாறும் சம்பந்தப்பட்ட ஏஜண்டுத் தோழர்களையும், சந்தா அன்பர்களையும் வேண்டிக் கொள்கிறோம்.

6 வயது முதல் 14 வயது வரையில் இலவசக் கல்வி

மத்தியப் பிரதேச சர்க்கார் முடிவு

தியாகிகள் குழந்தைகட்கு சலுகை

நாகபுரி, பிப். 21—

சுதந்திர இயக்கங்களில் சிறை சென்ற தியாகிகளின் பிள்ளைகளுக்கும், பெண்களுக்கும ‘மெட்ரிகுலேஷன்’ வரை இலவசமாகக் கல்வி போதிக்கப்படுமாம.

20 ஏக்கருக்குக் குறைவாக நிலம் வைத்துக்கொண்டிருக்கும் சாகுபடியாளர்களின் குழந்தைகளுக்கும் இலவசமாகக் கல்வி போதிக்கப்படுமாம்.

மத்தியப் பிரதேச மாநிலத்தில் 6 வயதிலிருந்து 14 வயது வரையிலுள்ள எல்லாக் குழந்தைகளுக்கும் இலவசமாகக் கல்வி போதிக்கப்படுமாம்.

‘ஷெட்யூல்’ வகுப்பினர், மலை ஜாதியினரைச் சேர்ந்த மாணவர்கள் பல்கலைக் கழகத் தேர்வுகளுக்கு பணம் கட்டவேண்டியதில்லை; பள்ளிக்கூடங்களிலும், கல்லூரிகளிலும் படிக்க அவர்களுக்கு ஏற்கனவே சம்பள விலக்களிக்கப்பட்டுள்ளதாம்.

மந்திரி சுப்ரமணியத்திற்கு கோவை தரும் பதில்

பூரண அர்த்தால் வரலாற்றுச் சிறப்புப் பெறுகிறது

கோவை, பிப். 21—

நிதி மந்திரி சுப்பிரமணியம், கோவையில், ‘பிப். 20-ல் பொது வேலைநிறுத்தம் நடைபெறக் கூடாது’ என்பதற்காக இரண்டு நாட்களுக்கு முன்பே கோவை நகரில் முகாம் செய்து, உள்ளூர் வர்த்தகர்களை அழைத்து, ‘கடையை மூடாதீர்கள்—திறந்து வையுங்கள்—போலீஸ் பாதுகாப்பு கிடைக்கும்’ என்று பிரச்சாரம் செய்திருக்கிறார். அப்படி இருந்தும், கோவையில், இதுவரை வரலாறு காணுதவகையில் ‘அர்த்தால்’ வெற்றிகரமாக நடைபெற்றிருக்கிறது. மந்திரி சுப்பிரமணியத்திற்கும் வெற்றிச் செய்தி அனுப்பப்பட்டிருக்கிறதாகத் தெரிகிறது.

கோவை நகர வரலாற்றில் கண்டிராத பரிபூரண அர்த்தால் பிப்ரவரி 20-ல் நடைபெற்றது.

சர்வகட்சி கூட்டணியின் வேண்டுகோளுக்கிணங்க, கோவை நகரில் எலலாக் கடைகளும், ஓட்டல்கள். சிற்றுண்டி விடுதிகள், காய்கறி கடைகள் உட்பட மூடப்பட்டுவிட்டன

நகரிலும் சுற்றுப்புறக் கிராமங்களிலும் உள்ள எல்லாவிதமான பெரிய — சிறிய தொழிற்சாலைகளும்—மில்கள் உட்பட பூரணமாக செயலற்று இருந்தன. இந்திய தேசியத் தொழிற் சங்கக் காங்கிரசின் எதிர்ப் பிரசாரத்தின் காரணமாகச் சிலர் வேலைக்கு வந்தும்கூட அவர்கள் எல்லாம் வெளியே அனுப்பப்பட்டனர்.

நகரிலும், சுற்றுப் பகுதிகளிலும் உள்ள எல்லா சினிமா தியேட்டர்களும் மூடிக்கிடந்தன.

பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் 10 முதல் 15 சதவிகித மாணவர்கள் மட்டுமே பள்ளிக்குச் சென்றனர்; பிற்பகலில் அதுவும் இல்லை.

அரசினர் கல்லூரியின் முன் நின்று, ‘கல்லூரிக்குச் செல்ல வேண்டாம்’ என்று கேட்டுக்கொண்ட மாணவர் கூட்டத்தின் மீது தடியடிப் பிரயோகம் செய்து 12 மாணவர்களைக் கைது செய்தனர்; தோழர்கள் செழியன், தண்டபாணி இருவரும் போலீஸ் அதிகாரிகளைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

நகருக்கு வழக்கமாக வியாபாரம் செய்வதற்கு கிராமங்களிலிருந்து வரும் பால், தயிர், மோர், காய்கறி. விறகு வியாபாரிகள் யாரும் நகருக்குள் வரவில்லை.

நகரில் 2 நாள் தங்கி, வியாபார பிரமுகர்களைச் சந்தித்து, கடைகள் திறப்பதற்காக நிதியமைச்சர் சுப்பிரமணியத்தின் முயர்சியும், இளைஞர் காங்கிரஸ், காங்கிரஸ், திராவிட கழக முயற்சிகளும் பலனளிக்கவில்லை. சுருக்கமாக சொல்ல வேண்டுமானல் கோவையில் இப்படிப்பட்ட அர்த்தால் என்றுமே நடைபெறவில்லை என்று பொதுமக்கள் பேசிக்கொள்கிறார்கள்.

நிதி அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க கடைகளைத் திறந்து வைத்திருந்த சில கடைகள் முன் மக்கள் வேடிக்கை பார்க்க கூடியிருந்தபோது, போலீசார் தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தைக் கலைத்ததுடன் பொதுமக்களில் சிலரையும் சுமார் 50 பேர் வரை போலீஸ் அதிகாரிகள் கைது செய்தனர்.

மலபார் ஸ்பெஷல் போலீஸ் அதிகாரி ஒருவர் ஒரு மாணவரின் முகத்தில் பூட்ஸ் காலால் உதைத்தபடியால் அந்த மாணவரின் மூக்கு உடைபட்டு, சிகிச்சை பெற்று வருகிறார்.

தடியடிப் பிரயோகத்துக்கு சிறிது நேரத்திற்கெல்லாம் கழகத் தோழர்களின் முயர்சியின் மீது, திறந்திருந்த 6 அல்லது 7 கடைகளும் மூடப்பட்டன. நகரில் காலை முதல் மாலை வரை தமிழர் பெரும்படை சுற்றிக்கொண்டேயிருந்து யாராவது கடையைத் திறக்க முயற்சி செய்தால் அவர்களைப் பணிவுடன் வேண்டி கடைகளை மூடவைத்தது.

கைதானவர்கள் விபரம்

கடைகளை மூடும்படி கேட்டுக்கொண்டதற்காக நகரில் ஆர். எஸ். புரத்தில் 4 தி. மு. க. தோழர்களும், பஸ்களில் பிரயாணிகளை ஏற வேண்டாமென்று கேட்டுக்கொண்டதற்காக இராமனுதபுரத்தில் ஷண்முகசுந்தரம், வடிவேலு என்கிற தி. மு. கழகத் தோழர்கள் இருவரும், பி. சோ.-வைச் சேர்ந்த முருகையன், கம்யூனிஸ்டு துரை ஆகிய நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

காந்திபுரத்தில் கன்னியப்பன் என்கிற தி.மு.க தோழரும், சத்தியசீலன் என்பவரும் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்களைச் சந்திப்பதற்குப் போலீஸ் நிலையத்திற்கு வரும் வழியில் தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த வெங்கட்ராமன் கைது செய்யப்பட்டார்.

ஆர். எஸ் புரத்தில் தோழர்கள் கரிகாலன், தமிழ் மணி, கனகு, இராமலிங்கம் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

இதல்லாமல், பஸ்களில் ஏற வேண்டாமென பிரயாணிகளைக் கேட்டுக்கொண்டதற்காக சிங்காநல்லூரில் தி. மு. கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் ஏ. கருப்பண்ணன், ஆர். நாராயணன், மாரிமுத்து, என். கந்தசாமி, ஆறுகுட்டி; தமிழரசுக் கழகத்தைச் சேர்ந்த தோழர்கள் வே சுந்தரம், கி நடராசன் ஆகிய 7 பேரும் கைது செய்யப்பட்டனர்.

ஊர்வலத்திற்கு 20-ந் தேதி அனுமதி தர போலீஸ் அதிகாரிகள் அனுமதி மறுத்ததின் பேரில் மாலை 6 மணிக்கு சிதம்பரம் பூங்காவில் தமிழ் மக்கள் அனைவரும்கூடி கூட்டணியின் உறுதிமொழியைப் படிக்கக்கேட்டு, திருப்பிச் சொல்லி உறுதிமொழி எடுத்துக்கொண்டனர்.

கூட்டத்திற்கு தோழர் ஆர். ராமராஜ் தலைமை தாங்கினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ